# ★ புலிக்கொடி பட்டொளிவீச மாவீரர் தினம்

## விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்) அரச, தனியார் கட்டிடங்கள், பாடசாலைகள், ஆலயம் மாவீரர் தின நிகழ்வுகளை ஒட்டி தமிழீழ தேசியக் கொடி மற்றும் பொது இடங்களிலும் கொடியான புலிக்கொடி பட்டொளி வீச தமிழீழ தேசியக்கொடி தமிழ்ப் பிரதேச பட்டொளி வீசிப் பறக்கின் றெங்கும் விழாக்கோலம் பூண் டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 07 இதழ்: 283
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-11-1991

## கர்ப்பிணி தாய்மாருக்கு உலர் உணவு நிவாரணம்

(யாழ்ப்பாணம்) கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உலர் உணவு நிவாரணமாக வழங்குவதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளது. அரிசி 5 கிலோவும், பருப்பு வகை 5 கிலோவும், மா 3 கிலோ, சீனி 2 கிலோ, தேயிலை ¼ கிலோ உட்பட மொத்தம் 15¼ கிலோ உணவுப் பொருள் வழங்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# கச்சாய்ப்பகுதியில் நேற்றுக்காலை குண்டுவீச்சு விமான தாக்குதல்!

## பொதுமக்கள் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியிலுள்ள கச்சாய் துறைமுகப்பகுதியில் நேற்றுக் காலை குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட அகோரக் குண்டு வீச்சினால் அப்பகுதியில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட வீடு களும், மீன்பிடி வள்ளங்களும் சேதமடைந்தன. பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 5-30 மணிக்கு கச்சாய் துறைமுகப் பகுதியில் மூன்று பொம்மர்

(4-ம் பக்கம் பார்க்க)

## வலி வடக்கில் ராணுவம் துப்பாக்கி பிரயோகம்

(காங்கேசன்துறை) வலி-வடக்கில் நேற்று அதிகாலை இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகமும், ஷெல் தாக்குதலும் மேற்கொண்டனர்.

வலி-வடக்கில் கடந்த இரண்டு தினங்களாக இராணுவத்தினர் அடிக்கடி துப்பாக்கிப்பிரயோகமும், ஷெல் தாக்குதலும் நடத்தி வருகின்றனர்.

நேற்று அதிகாலை தச்சன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு வழியாக உணவுவர ஏற்பாடு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டிற்கு ஆனையிறவு ஊடாக உணவுப் பொருள்கள், மருந்துகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புனர்நிர்மாண, புனர்வாழ்வு சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு.எஸ் சந்திரசேகரத்தை தெரிவிக்கையில் யாழ் குடாவில் உணவுப்பொருள் தட்டுப்பாட்டை தவிர்க்கு முகமாகவே ஆனையிறவு ஊடாக பொருட்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் காங்கேசன்துறை துறைமுகம்மூலம் உணவுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத்திட்டம் நிறைவேறியது

ஐக்கிய தேசியக்கட்சி அரசின் வரவு செலவுத்திட்டம் 53 அதிகப்படியான வாக்குகளால் நேற்று நாடாளுமன்றில் நிறைவேறியது.

(4-ம் பக்கம்பார்க்க)

## போராளிகளுடன் தொடர்பு உடையோருக்கு அரசு பொது மன்னிப்பு

(கொழும்பு)

இயக்கத்தைச்சேர்ந்த பொதுமக்களில் போராளிகளுடன் தொடர்பு உடையவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க அரசு தயார் என்று அமைச்சரவை பேச்சாளரும், கைத்தொழில் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொதுமன்னிப்பை தொடர்ந்து இந்த மக்கள் தமது வீடுகளுக்கு மீண்டும் செல்லலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இவ் வித மன்னிப்புவழங்கப்படுமா

(3ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் இராணுவம் பின்வாங்கியது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குவாட்டர்ஸ் முகாமிலிருந்து இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிவந்த இராணுவ அணிகள் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் சிக்கியதில் இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மேற்படி இராணுவ முகாம்களிலிருந்து நோக்கிச்சென்ற இராணுவ அணிகளே கருவேப்பஞ்சேனை

(4ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு 2000 குடிசைகள்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கு 2000 தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கு நிதி உதவி அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் உடனடியாக சர்வமசேவை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைமுறைப்

(4-ம்பக்கம் பார்க்க)

## "பேச்சுக்கள் தொடர்வது புலிகளைப் பொறுத்தது" அமைச்சர் தொண்டமான்

(புதுடில்லி)

அரசு - புலிகள் பேச்சு தொடர்வது விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தைப் பொறுத்தது என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழர்களின் அவல நிலை

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவக மக்களுக்கு தொடர் நிவாரணம் வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

தீவகம், பூநகரி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்குத் தொடர்ச்சியாக உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

தீவக மக்களுக்கு ஏற்கனவே உலர் உணவு விநியோகத்தை நிறுத்துமாறு கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## வாடகைக் கப்பலில் வடபகுதிக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் இரண்டு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி வடபகுதிக்கு உணவு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பிலிருந்து யாழ் செயலகத்துக்கு வந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் சகிதம் பொருள்களை இறக்குவதற்கு இரண்டு 'பாஜ்' வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள ஐந்து 'பாஜ்' களுடன் இந்த இரண்டு 'பாஜ்' உம

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் - ராவ் புதுடில்லியில் சந்திப்பு

(புதுடில்லி)

கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு.எஸ் தொண்டமான் இந்தியப்பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவை சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## உத்தேச இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளில்

# மாணவர் அனுமதி - 1991

1. 1989 டிசெம்பர், 1988 ஆகஸ்ட், 1987 ஆகஸ்ட் ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளிடமிருந்து, உத்தேச இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளும்;

**2. அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகள்**

உத்தேச இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு மாணவர் ஒருவர் அனுமதி பெறுவதற்கு தகைமையுடையவராக இருக்கவேண்டுமாயின்;

(i) (அ) க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

(ஆ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே முறையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நாலாவது பாடத்தில் 25% புள்ளிகளுக்குக் குறையாமலும் பெற்றிருத்தல் வேண்டும்;

அத்துடன்

(ii) நான்கு பாடங்களிலும் மொத்தத் திரட்டு 180 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றிருத்தல் வேண்டும்.

மூன்று தடவைகளுக்கு மேல் க. பொ. த (உயர்தர) பரீட்சையை எடுத்திருந்தால் அவர் அனுமதிக்குத் தகைமை யற்றவராவார்.

3. பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழகக் கல்லூரியொன்றில் பதிவு செய்யப்பட்டவரான அல்லது கற்கை நெறியொன்றையும் பின்பற்றுகின்றவரான அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்பவியல் டிப்புளோமாவிற்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிக்கு பதிவு செய்தவரான மாணவரொருவர் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்தகைய மாணவர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.

4. சகல விபரங்களையும் கொண்ட, முழுமையான முன்வைக்கப்பட்ட கற்கைநெறி அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி கோரும் கற்கை நெறியையும் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். ஒரு பரீட்சார்த்தி ஒன்றுக்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளுக்கோ விண்ணப்பிக்க விரும்பினால் அவரின் விருப்பத்திற்கமைய கல்லூரிகளையும், கற்கை நெறிகளையும் முன்னுரிமை ஒழுங்கில் நிரற்படுத்த வேண்டும் விண்ணப்பிக்கப்பட்டபின் இவ் முன்னுரிமை ஒழுங்கில் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

5. இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றில் கற்கை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிப்பதில் தாமதம் எதுவும் ஏற்படினும், கல்லூரிகளுக்கிடையில் இடமாற்றம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

6. ஒவ்வொரு விண்ணப்பமும் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டு பதிவுத் தபாலில் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 20, வார்ட் இடம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு 1991-11-23ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான அனுமதி'' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

7. முக்கிய குறிப்பு:-

வவுனியா, வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் கணித விஞ்ஞான டிப்புளோமா/சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 1991-11-25ந் திகதிக்கு முன்பாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம். இவ் விண்ணப்பதாரர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, கொழும்பு என்ற முகவரிக்கும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

8. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட க. பொ. த (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின்படி விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சார்த்திகள் ஒவ்வொரு அமர்வுக்கும் தனித் தனி விண்ணப்பப் பத்திரங்களை அனுப்புதல் வேண்டும். ஆயினும் எல்லா விண்ணப்பங்களும் ஒரே உறையினுள் வைத்து அனுப்பப்படலாம்.

செயலாளர்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

01-11-1991

## முன்வைக்கப்படும் கற்கை நெறிகள்

| | கற்கைநெறி | தகைமைகளும் பிற விசேட தேவைகளும் | | இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி | அமைந்துள்ள இடம் | தாய்ப் பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | ஆங்கிலத்தில் டிப்புளோமா/சான்றிதழ் | கலைத்துறைக் கற்கைப்பயிற்சி நெறிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அனுமதிப்பதற்கான தகைமைகளுடன் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி; | 1. | ஊவா மாகாணம் | பதுளை | ஸ்ரீ ஜயவர்தன புர |
| | | | 2. | சப்பிரகமுவா மாகாணம் | பெலிகுல்-ஓயா | ஸ்ரீ ஜயவர்தன புர |
| | | | 3. | வடமத்திய மாகாணம் | அனுராத-புரம் | ஸ்ரீ ஜயவர்தன புர |
| 2. | கணக்கியலிலும் நிதியியலிலும் டிப்புளோமா/சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பாடங்களான பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியியலும் ஆகியவற்றுடன் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பாடம் | 1. | தென் மாகாணம் | காலி | கொழும்பு |
| | | | 2. | வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | ஸ்ரீ ஜயவர்தன புர |
| 03. | பிரயாணமும் உல்லாசப்பிரயாணத்துறை முகாமையில் டிப்புளோமா/சான்றிதழ். | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள். | 1. | சப்பிரகமுவா மாகாணம் | பெலிகுல் ஓயா | ஸ்ரீ ஜயவர்தன புர |
| 04 | ஹோட்டல் முகாமைத்துவத்தில் டிப்புளோமா/சான்றிதழ். | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள்; | 1. | வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | ஸ்ரீ ஜயவர்தன புர |
| 05. | முயற்சிகள், சிறு வியாபார முகாமையில் டிப்புளோமா/சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பாடங்களான பொருளியல், கணக்கியல், வர்த்தகமும் நிதியியலும் ஆகியவற்றுடன் க. பொ. த (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பாடம். | 1. | வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | ஸ்ரீ ஜயவர்தன புர |
| | | | 2. | தென் மாகாணம் | காலி | கொழும்பு |
| 06. | காப்புறுதி அபாய முகாமையில் டிப்புளோமா/சான்றிதழ் | பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகியவற்றுடன் க. பொ. த (உயர்தர) பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பாடம். | 1. | தென் மாகாணம் | காலி | கொழும்பு |
| 07. | பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை சிறப்புப்பாடமாகக் கொண்டு விவசாயத்தில் டிப்புளோமா/சான்றிதழ் ** ஏற்றுமதி விவசாயம்; பெருந்தோட்ட முகாமை*; விவசாய அபிவிருத்தியும், பரிமாற்றங்களும்; விவசாய வியாபார முகாமை; வெளிக்கள எந்திரவியல்; பண்ணை எந்திரங்களும், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பமும்; உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம்*; உணவும் ஊட்ட வளமும்*; விலங்கின உற்பத்தி*; சுற்றாடல் விஞ்ஞானம்; பண்ணை முகாமைத்துவமும் பாதுகாவலும்* | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் ஆகியவற்றுடன் கீழ்வரும் ஏதாவது ஒரு பாடம், விவசாயம், புவியியல், பௌதிகவியல், தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம்; | 1. | வடமேல் மாகாணம் | மகந்துற | பேராதனை |
| | | | 2. | ஊவா மாகாணம் | றன்வல | பேராதனை |
| | | | 3. | கிழ் மாகாணம் | அம்பாறை | கிழக்கு |
| 08 | பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை சிறப்புப்பாடமாகக் கொண்டு மனையியல், வீட்டுவளத்தில் சான்றிதழ்/டிப்ளோமா** உணவும் ஊட்டவளமும்; உணவூட்டியல்; உணவுச்சேவைகள் முகாமை; ஒப்பனைக்கலை; உள்ளக வடிவமைப்பும் மனை இடவமைப்பும்; உடைகள், ஆடைகள் அமைப்பும் தயாரித்தலும்; பாடசாலை முன்கல்வி; விலங்கு வேளாண்மை; வீட்டுத்தோட்டம்; உணவுத்தயாரிப்பு | (1) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் கீழ்வரும் பாடங்களில் ஏதாவது நான்கு பாடங்கள்: தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் விவசாயம், பௌதிகவியல், தூய கணிதம் அல்லது பிரயோககணிதம். அல்லது (2) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் மனைப் பொருளியலை ஒரு பாடமாக எடுத்த கலைத்துறை மாணவர்கள் (கலைத்துறைப் பரீட்சார்த்திகள் கற்கை நெறியை முறையாக தொடங்குவதற்கு முதல் ஒரு குறிப்பிட்ட விஞ்ஞான நெறியை கற்குமாறு கேட்கப்படுவார்கள்). | 1. | வடமேல் மாகாணம் | குளியாப்பிட்டிய | களனி |
| | | | 2. | மேல் மாகாணம் | தெகிவளை | ஸ்ரீ ஜயவர்தன புர |
| 09. | கணிதவிஞ்ஞானத்தில் டிப்ளோமா சான்றிதழ் ** | க. பொ. த (உயர்தரப்)ப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகியவற்றில் சித்தி சிறப்பு தேவையாகும் | 1. | மேல் மாகாணம் | மத்தேகொட | களனி |
| | | | | | மருதானை | களனி |
| | | | 2. | வடமாகாணம் | வவுனியா | யாழ்ப்பாணம் |
| 10. | உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞானத்தில் சிறப்புத் தேர்ச்சியுடன் விஞ்ஞானத்தில் டிப்ளோமா/சான்றிதழ் | பின்வருவனவற்றுள் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (1) தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் அத்துடன் பௌதிகவியல்/தூய கணிதம்/பிரயோக கணிதம் அல்லது (2) இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல் அத்துடன் தாவரவியல் தூய கணிதம் அல்லது (3) பௌதிகவியல், இரசாயனவியல், தூயகணிதம் அத்துடன் பிரயோக கணிதம் | | மத்திய மாகாணம் | பொல்கொல்ல | பேராதனை |
| 11. | உல்லாசப்பயணத் துறையிலும் கலாசாரவியலும் டிப்ளோமா/சான்றிதழ் | க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஏதாவது நான்கு பாடங்கள் | | வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | ஸ்ரீ ஜயவர்தன புர |

* இக்குறியீட்டால் குறிக்கப்பட்டவை கிழக்கு மாகாண பல்கலைக்கழகக் கல்லூரியினால் வழங்கப்படும் விசேடங்களாகும்.

** இக்குறியீட்டால் குறிக்கப்பட்டவை டிப்ளோமா தகைமையைச் சிறப்பாக நிறைவேற்றும் மாணவர் ஒருவர் ஒரு வருட வேலையனுபவத்தின் பின்னர் அவர் விரும்புமிடத்து பட்டப்படிப்பை மேற்கொள்ளமுடியும்.

*** இக்குறியீட்டால் குறிக்கப்பட்டவை எந்தமொழியில் க. பொ. த. (உ/த) பரீட்சையை எடுத்தாலும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ள்

| ...ாய்ப்பச் ...க் ழகம் | போதனு மொழி |
|---|---|
| ...ரீஜயவர்தன புர | *** |
| ...ரீஜயவர்தன புர | *** |
| ...ரீஜயவர்தன புர | *** |
| கொழும்பு | *** |
| ...ரீஜயவர்தன புர | *** |
| ...ரீஜயவர்தன புர | *** |
| ...ரீஜயவர்தன புர | * - * |
| ...ரீஜயவர்தன புர | *** |
| ...ொழும்பு | *** |
| கொழும்பு | *** |
| ...பேராதனே | *** |
| ...பேராதனே | *** |
| கிழக்கு | ** |
| ...ய ...வனி | *** |
| ஸ்ரீ ...யவர்தன புர | *** |
| ...ளனி | *** |
| ...ளனி ...யாழ்ப்பாணம் ...பேராதனே | *** ...... |
| ஸ்ரீ ஜெயவர்த்தன புர | ...... |

...ப்படும் விசேட துறை

...ாணவர் ஒருவர் இரண்டு ...முடியும்.

...எடுத்தாலும் இக்கழை

# மாதிரி விண்ணப்பப்படிவம்
## இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு அனுமதிக்கான விண்ணப்பம் - 1991

01. 1 விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ..............................

02. நிரந்தர முகவரி ..............................

03 பால் 1: ஆண் 2: பெண்

04 இனம் 1: சிங்களவர் 2: தமிழர் 3: இஸ்லாமியர் 4: வேறு

05 நிரந்தர வசிப்பிடத்தின் நிர்வாக மாவட்டம்:

06. அனுமதி கோருவதற்குத் தகுதியான க. பொ. த. [உயர்தர] பரீட்சையின் பெறுபேறு

06. 1 பரீட்சை வருடம்

06. 2 பரீட்சைக்குத் தோற்றிய நிர்வாக மாவட்டம்

06. 3

| தோற்றிய பாடங்கள் | பெற்ற தரம் | மொழி |
|---|---|---|
| ...... | ...... | ...... |
| ...... | ...... | ...... |
| ...... | ...... | ...... |
| ...... | ...... | ...... |

06 4 சுட்டிலக்கம்

06. 5 திரட்டுப் புள்ளிகள்

07 க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள்

07 1 ஒவ்வொரு தடவையினதும் திரட்டுப் புள்ளிகள்:

1-ம் தடவை 2-ம் தடவை 3-ம் தடவை

08. நீர் எப்போதாவது இலங்கையில் உள்ள ஏதாவது பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக கல்லூரியொன்றில் உள்ள மாணவராக பதிவுசெய்துள்ளீரா? ஆம் எனின் முழு விபரங்களையும் தருக.

1: ஆம்

2: இல்லை

09 அனுமதிக்கு கருத்திற்கொள்ளவேண்டிய கற்கை நெறிகளில் உமதுடைய முன்னுரிமை ஒழுங்கைக் குறிப்பிடுக (விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முன்னுரிமை ஒழுங்கை மாற்றுவதற்கு மாணவர் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்)

| முன்னுரிமை ஒழுங்கு | கற்கை நெறி | பல்கலைக்கழகக் கல்லூரி | மொழி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

இப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும், உண்மையானதும் என்றும் நான் மூன்று முறைகளுக்கு மேல் க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: ..............................

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

[ஏ-1727]


## வரி விளம்பரம்

### வாங்கப்படுகிறது

சேப்பம் விதை. இலுப்பை விதை வாங்கப்படுகிறது. மிக்க வைத். (ஏ-1729)

### ஆங்கிலக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு, சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து, தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் தொடர்பு நேரம் சனி, ஞாயிறு காலை 11-00-12-00 மணி, S. ஜெயராசா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம். யாழ்ப்பாணம். (இ- 5312)


## தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுவில் தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுவோரின் தொடர்பு இலக்கங்கள் வருமாறு:

மானிப்பாய்

தை - 91

26, 42 98, 159, 161, 391, 521, 820, 944, 1086, 1808, 1924, 3228.

மாசி - 91

49, 91, 100, 216, 358, 1127, 1645, 2118, 2401, 3139, 3663

பங்குனி - 91

337, 710 807, 1612, 2593, 3140, 3242, 3284, 3286, 3865.

சித்திரை - 91

213, 465, 713, 897, 1521, 2205, 2956, 3169, 3208, 3698.

வைகாசி - 91

189, 278, 535 600, 867, 875, 3076, 3600.

ஆனி - 91

231, 401, 485 705, 1128, 1460, 2391, 3472.

(4-ம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

23 11 199

சனிக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 07)

திதியை: பின்னிரவு 1 46 வரை. ரோகிணி: பிற்பகல் 12 39 வரை. இராகு காலம்: காலை 9-11 முதல் 10-4 வரை. சுப நேரம்: மாலை 3-11 முதல் 4-41 வரை, அமிர்தசித்தம்

மேடம்: மன அமைதி இன்மை. தொழில் சீர்கேடு குடும்ப விரோதம்.

இடபம். இனிய சந்திப்பு. பண வரவு. சகோதர பாசம்.

மிதுனம்: வழித் தொல்லை; நண்பர் பகை. அநாவசியத் தலையீடு.

கடகம்; குடும்ப உல்லாசம். மனை மகிழ்ச்சி. தொழில் லாபம்.

சிங்கம்: காரிய சித்தி. மனைவழி உறவுகள். தாய்வழி உதவி

கன்னி: மனக் கிலேசம். உறவினர் பகை. ஆடம்பரச் செலவு.

துலாம்: வகை மூட்டம். வருவாய் பாதிப்பு உடல்நிலை சோர்வு

விருச்சிகம்: மாமனார் உதவி. தொழில் மகிழ்ச்சி. குடும்ப சுகம்.

தனுசு: எதிர்பாராத உறவு. தொழில் மாற்றம். வரவேற்பு.

மகரம்: வேண்டாத உறவு. தொழில் நஷ்டம். வேலைப் பளு

கும்பம்: அடிமை நிலை. அஞ்ஞாதவாசம் குடும்ப மோதல்.

மீனம்; காரியம் கைகூடல். பணியாளர் உதவி. தெய்வ தரிசனம்.

ஜோதிடர்

